O.S. No: 87/2015

பெயர் : திவ்யா

**வா.சா. 4**

18-12-2024

**4, 13, 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியமளிக்க சம்மன் வந்தது . 1966 இல் இருந்து 2014 வரை அடங்கல் கொண்டவர சொல்லப்பட்டிருந்தது. 2014 ஆம் வருட பசலி என்பது 1424 பசலி. நான் 1428 இல் இருந்து 1431 வரை தாக்கல் செய்திருக்கிறேன். 254/3c என்பது தேசிங்க ராஜா வகையறா என்று 1428 பசலியில் உள்ளது. புல எண் 248/6c என்பது ஜெயராமன் வகையறா பெயரில் உள்ளது . புல எண் 248/3B என்பது விஜயராஜ் பெயரில் உள்ளது. புல எண் 248/2c என்பது சந்திரலேகா பெயரில் உள்ளது. புல எண் 136/6 என்பது சூரியா பெயரில் உள்ளது. புல எண் 126/5c என்பது மகேந்திரன் பெயரில் உள்ளது. புல எண் 125/3 ராஜலெட்சுமி பெயரில் உள்ளது . புல எண் 123/2 சுவாமிநாதன் பெயரில் உள்ளது . புல எண் 129/5A என்பது குருநாதன் பெயரில் உள்ளது. புல எண் 123/1 என்பது, நாகராஜன் பெயரில் இருந்து பட்டா மாறுதல் செய்து கோதண்டராமசாமி கோவில் மற்றும் சிவராமகிருஷ்ணன் பெயரில் உள்ளது . புல எண்126/10A நாகராஜன் பெயரில் உள்ளது . புல எண் 126/10B ஈஸ்வர் பெயரில் உள்ளது. மேற்சொன்ன எண்கள் எத்தனை போகம் சாகுபடி செய்யப்பட்டதாக உள்ளது என்றால் பார்த்து தான் சொல்ல வேண்டும் . நான் கடந்த 2 வருடங்களாக இந்த கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றுகிறேன் . சம்மன் வந்த பிறகு கிராமத்தில் போய் இந்த தாவா சொத்துக்களை பார்க்கவில்லை . நான் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் இந்த சொத்துக்கள் எவ்வாறு அவர்களுக்கு கிடைத்தது என்று சொல்ல முடியாது . நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் அந்த பசலியில் எவ்வளவு வருமானம் வந்தது என்று சொல்ல முடியாது. நான் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் எந்த வருடத்தில் இருந்து அவர்கள் பெயர் பதிவில் உள்ளது என்று சொல்ல முடியாது . நான் பதவிவகிக்கம் இந்த கிராமத்தில் நஞ்சை புஞ்சை நிலங்களில் எவ்வளவு வருமானம் எவ்வளவு வருகின்றது என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது.

**6, 7 பிரதிவாதி தரப்பில் இந்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

O.S. No: 87/2015

பெயர் : மாரியப்பன்

**வா.சா. 3**

18-12-2024

**4, 13, 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வந்தது. நான் சுவாமிமலை கிராம நிர்வாக அலுவலராக கடந்த 5 மாதங்களாக பணியாற்றுகிறேன். எனக்கு 1966 முதல் 2014 வரை அடங்கல் பதிவேடு கொண்டவரச்சொல்லி அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் 1420 முதல் 1423 வரை கொண்டு வந்திருக்கிறேன். நான் தாக்கல் செய்த ஆவணங்களில் புல எண் 135/2 என்பது எம்.கண்ணம்மாள் வகையறா பெயரில் உள்ளது. விஸ்தீர்ணம் 24.5 ஏர்ஸ், புஞ்சை நிலம். புல எண் 136, 1.54 ஏர்ஸ், புஞ்சை நிலம், தனபாக்கியம் பெயரிலுள்ளது. அதில், வாழை, பாக்கு, நார்த்தை, தென்னை, பலா, கொய்யா, சவுக்கு, தேக்கு, மா, புளி மற்றும் 2 பில்டர் பாய்ண்ட் உள்ளது. இதில் யார் பெயரில் மின் இணைப்பு மற்றும் பில்டர் பாய்ண்ட் உள்ளது என்று தெரியாது. புல எண் 111/4A1 நாகராஜன் பெயரில், 1420 பசலியில் உள்ளது. 1421 பசலியில் உட் பிரிவு செய்யப்பட்டு, 4A1A. பரப்பு 13.5 ஏர்ஸ் பட்டா எண் 1006 நாகராஜன் மகன் மகேந்திரன் பெயரில் உள்ளது. 4A1B பரப்பு 13.5 ஏர்ஸ், பட்டா எண் 1007 எம்.சிவராமகிருஷ்ணன் பெயரில் உள்ளது. 1421, 1422, 1423 பசலிகளில் மனை பகுதியில் உள்ளது. அதில் சாகுபடி என்று குறிப்பிடப்படவில்லை. புல எண் 122/1B, பரப்பு 29 ஏர்ஸ், பட்டா எண் 98, கே.சித்தாராமன் பெயரில் உள்ளது. அதில் 2 பில்டர் பாய்ண்ட் உள்ளது. அதில் தென்னை, தேக்கு உள்ளது. புல எண் 122/2, நஞ்சை நிலம், பரப்பு 30 ஏர்ஸ், பட்டா எண் 98, கே.சித்தாராமன் பெயரில் உள்ளது. எல்லா பசிலியிலும் அவ்வாறு தான் உள்ளது. புல எண் 120/2, நஞ்சை நிலம், 60 ஏர்ஸ், பட்டா எண் 137, என்.விஜயராஜ் பெயரில் உள்ளது. அதில் பில்டர் பாய்ண்ட் உள்ளது. இது விஜயராஜ் பெயரில் தான் மின் இணைப்பு, பில்டர் பாய்ண்ட் உள்ளது. புல எண் 122/1A. நஞ்சை நிலம் பரப்பு 25 ஏர்ஸ், பட்டா 137, என் விஜயராஜ் பெயரில் உள்ளது. நான் தாக்கல் செய்தள்ள அடங்கலில் எந்த காலத்தில் இருந்து அவர் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று என்னால் சொல்ல இயலாது. இந்த அடங்கலில் அந்த அந்த பசலில் எவ்வளவு வருவாய் என்று சொல்ல இயலாது. நான் சம்மன் கிடைத்த

பிறகு தாவா இடத்தை போய் பார்க்கவில்லை. அந்தந்த புல எண்ணில் அந்தந்த பெயர் கொண்டவர்கள்தான் சாகுபடி செய்கிறார்களா என்று தெரியாது. 1422 ஆம் பசலி புல எண் 135/2, புஞ்சை நிலம், பரப்பு 24.5 ஏர்ஸ், பட்டா எண் 1005, விமலா பெயரில் உள்ளது. 1421 ஆம் பசலியில் புல எண் 135/2, கண்ணம்மாள் பெயரில் இருந்து விமலா பெயருக்கு மாறியதாக குறிப்பு உள்ளது . இந்த நிலங்களில் இருந்து எவ்வளவு வருவாய் வருகிறது என்ற குறிப்பு இல்லை.

**6, 7 பிரதிவாதிகள் தரப்பில் இந்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

Sd (xxxx)
Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

O.S. No: 87/2015

பெயர் : ராஜராஜன்

**வா.சா. 2**

18-12-2024

**4, 13, 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

திருவலஞ்சுழி கிராம நிர்வாக அலுவலராக கடந்த 3 மாதங்களாக பணியாற்றுகிறேன். சம்மனில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். சம்மனில் 1966 இல் இருந்து 2014 வரை ஆவணங்களை கொண்ட வரச்சொல்லியிருந்தார்கள். 1966 இல் இருந்து ஆவணங்கள் கிடைக்கவில்லை. 1407, 1408, 1410 பசலிக்கு உரிய ஆவணங்களை கொண்டு வந்திருக்கிறேன். எனக்கு சம்மனில் அடங்கல் கொண்டவரச்சொல்லியிருந்தார்கள். நான் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்திருப்பது. 1407, 1408, 1410 பசலிக்கு உரிய ஆவணங்கள் ஆகும். முதல் பக்கத்தில் எந்த பசலிக்குரியது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. இது போக மீதம் உள்ளது 1410, 1407, 1408 என்று உள்ளது. புல எண் 209/3C 1 முதல் தாளில் உள்ளது. நாகராஜன் பெயரில் உள்ளது . விஸ்தீர்ணம் 0.06.5 ஏர்ஸ். அது புஞ்சை வகையை சார்ந்தது. அந்த நிலத்தில் பனை 2 ஏர்ஸ், தேக்கு 2.5 ஏர்ஸ், ம ீதம் பில்டர் பாய்ண்ட் செட் 1 ஏர்ஸ், கூரை வீடு 1 ஏர்ஸ். பனையும், தேக்கும் எத்தனை வருட பயிர் என்று தெரியவில்லை. சம்மன ் வந்த பிறகு அந்த சொத்துக்களை நான் போய் பார்க்கவில்லை. இந்த அடங்கலை வைத்துக்கொண்டு இந்த இடம் யார் யார் அனுபவத்தில் உள்ளது என்று என்னால் சொல்ல முடியாது . 209/3c2 என்பது நாகராஜன் பெயரில் உள்ளது. 1 ஹெ க்டர் 43.5 ஏர்ஸ். அதில் தென்னை 1.40 ஏர்ஸ், மா 2 ஏர்ஸ், தேக்கு 1.5 ஏர்ஸ். 289/1A புஞ்சை வகைபாடு, 1.67 ஏர்ஸ் நாகராஜன் பெயரில் உள்ளது. அதில் தென்னை 1.66.5 ஏர்ஸ், பில்டர் பாய்ண்ட் 0.00.5 ஏர்ஸ். எக்ஸ்- 1 ஆவணத்தை வைத்து ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் என்று கணக்கிட்டு சொல்ல முடியாது. அடங்கலில் வருமானம் குறித்து கணக்கு எழுதுவது கிடையாது . அடங்கலை வைத்து நாகராஜனுக்கும் இந்த சொத்து தனிப்பட்ட சொத்தா , மூதாதையர் சொத்தா எவ்வாறு கிடைத்தது என்று சொல்ல முடியாது.

**6 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இதை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**10, 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பொதுவாக பட்டா மாறுதல் செய்வதற்கு உரிய ஆவணங்களை வட்டாட்சியரிடம் கொடுத்து அதை பரிசீலனை செய்து , Proceedings செய்து தான் பட்டா மாற்றுவர்கள் என்றால் ஆமாம். அதனடிப்படையில் தான் A Register சிட்டா எல்லாம் மாறும். திருவலஞ்சுழி கிராமத்தில் 209/3A நல்லநாயகன் பெயரில் உள்ளது. 209/3B கல்யாணசுந்தரம் பெயரில் உள்ளது . 209/3c1, 209/3c2 நாகராஜன் பெயரில் உள்ளது. நல்லநாயகன் என்று சொன்ன சேர்ட்டீஸ். 209/3c என்பது 3c1. 3C2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டு, நாகராஜன் பெயரில் உள்ளது . 289/1A என்பது நாகராஜன் பெயரில் உள்ளது. அது புஞ்சை வகைபாடு.

இதையே 15 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தனர்.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.